செ.கு.எண் : 229

நாள் : 25-12-201

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் அறிக்கை – 25.12.2014

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையிலிருந்து மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 3 மற்றும் 4 வது பிரிவு பாசன நிலங்களுக்கு பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு அணையிலிருந்து மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 3 மற்றும் 4 வது பிரிவு பாசன நிலங்களுக்கு பிசான பருவ சாகுபடிக்கு **26.12.2014** முதல் தண்ணீர் திறந்து விட ஆணையிடப்படுகிறது.

இதனால், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, இராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் ஆகிய வட்டங்களிலுள்ள **12,018** ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு :

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9